# வவுனியாவில் விமானக் குண்டுவீச்சு: மூவர் பலி

(வவுனியா) வவுனியா மாவட்டத்தில் நேற்றுப் பரவலாக நடத்தப்பட்ட விமானக்குண்டு வீச்சில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டனர். நேற்று அதிகாலை 3-00 மணியளவில் வவுனியாவில் உள்ள தேவகுளம் பகுதியில் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஸ்ரீபத்மநாதன் (35 வயது), (4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 29 ஷஃபான் 25 இதழ்: 31
யாழ்ப்பாணம் புதன்கிழமை 13-3-1991

## பீரங்கித் தாக்குதல் மூவர் காயம்

(புலோலி) பருத்தித்துறை முனைப்பகுதி கடலிலிருந்து நேற்று பிற்பகல் 2 மணியளவில் கடற்படையினர் குடியமனைப் பகுதியை நோக்கி நடத்திய பீரங்கித் தாக்குதலினால் குழந்தை உட்பட மூவர் காயமடைந்தனர்.

சுமார் அரை மணி நேரம் நடந்த இத்தாக்குதலினால் (4-ம் பக்கம் பார்க்க)

## மீண்டும் திருப்பப்பட்ட யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்) கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த யாழ். அரச அதிபர் திரு. அல்ரன் அல்பிரட் வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் திருப்பி அனுப்பப்பட்டார். (4-ம் பக்கம் பார்க்க)

# கொழும்பு நகரில் தீவிரமான பாதுகாப்பு நடவடிக்கைகள்

## வெளியாட்கள், வாகனங்கள் கண்காணிப்பு

(கொழும்பு)

**அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னவின் கொலையை அடுத்து கொழும்பு நகரில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.**

கொழும்பில் உள்ள ஹோட்டல்கள், விடுதிகள் மற்றும் வீடுகளில் தங்கும் வெளியாட்கள் குறித்துப் பலத்த கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வீதிகளில் சாரதிகள் இன்றி நிறுத்திவைக்கப்படும் வாகனங்கள் மற்றும் நீண்ட நேரமாக நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் வாகனங்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கவும் பொலிஸாருக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் தங்குவதற்கு வரும் வெளியாட்களின் முழு விபரங்களையும் பெற்ற பின்பே அவர்களைத் தங்குவதற்கு அனுமதிக்குமாறு அவற்றின் உரிமையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

முழுப் பெயர், முகவரி, அடையாள அட்டை, கொழும்பு (4-ம் பக்கம் பார்க்க)

## அரசாங்க படைகளுக்கு 'புளொட்' அமைப்பு உதவி

(கொழும்பு) விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதலை நடத்துவதற்கு அரசாங்க படைகளுக்கு தமது அமைப்பு உதவி வருவதாக புளொட் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

பல இடங்களில் தங்கள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள் அரச படைகளுடன் இணைந்து புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் அவர் கூறினர்.

## ஷெல் வீச்சினால் மீன்பிடிப் படகு சேதம்

(மாங்குளம்) பருத்தித்துறை சுற்றோவளம் கடற்பகுதியில் மீன்பிடிப் படகு ஒன்று கடற்படைத் தாக்குதலில் முற்றாகச் சேதமடைந்தது. (4-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் படையினரால் 14 பொதுமக்கள் கைது

(திருமலை) திருகோணமலையில் பள்ளிக்குடியிருப்பிற்கு சென்றிருந்த 14 பொதுமக்கள் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் கைதான இந்த 14 பொதுமக்களும் எங்கு கொண்டு செல்லப்பட்டனர் என்பது குறித்து இதுவரையும் தகவலெதுவும் தெரிவிக்கப்படவில்லை. (வி)

## கரை ஒதுங்கிய ஆணின் சடலம்

(பருத்தித்துறை) குடத்தனை கடற்கரைப் பகுதியில் சுமார் 22 வயது மதிக்கத்தக்க இளைஞரொருவரின் சடலம் கடந்த திங்கட்கிழமை கரையொதுங்கி அப்பகுதி மீனவர்களால் மீட்கப்பட்டது.

## மண்டூரில் 250 தமிழர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்

(மட்டக்களப்பு) மண்டூர் கிராமத்தில் அண்மையில் அதிரடிப் படையினர் நடத்திய சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்ட 250 க்கும் அதிகமான தமிழர்கள் தொடர்ந்து தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை மட்டக்களப்பு அம்பாறைப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக படையினர் தேடுதல் நடவடிக்கையை முடுக்கிவிட்டுள்ளனர். (4-ம் பக்கம் பார்க்க)

## பகிஷ்கரிப்பை கைவிட்டு பாராளுமன்றம் செல்ல எதிர்க் கட்சிகள் முடிவு?

(கொழும்) பாராளுமன்றத்தை பகிஷ்கரித்துவரும் எதிர்க்கட்சிகள் தமது பகிஷ்கரிப்பைக் கைவிட்டு பாராளுமன்றம் செல்வதற்கு முடிவுசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 19-ம் திகதியுடன் இந்த பகிஷ்கரிப்புக் (4-ம் பக்கம் பார்க்க)

## உணவுப் பொருள்கள் தாராளமாக விற்பனை

(யாழ்ப்பாணம்) கல்வியங்காடு, திருநெல்வேலி வர்த்தக நிலையங்களில் சில பொருள்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையிலும்பார்க்க குறைந்த விலையில் விற்பனை செய்யப்படுவதை பார்க்கக் கூடியதாகவுள்ளது.

சீனி கிலோ 35 ரூபா, மாவு 25 ரூபா, மற்றும் அரிசி 23 ரூபாவிலிருந்து 28 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

பாலமா வகைகளும் கட்டுப்பாட்டு விலையில் அநேக இடங்களில் விற்பனை செய்யப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (4-ம் பக்கம் பார்க்க)

## ப. நோ. கூ. சங்கங்களில் விற்பனையாகும் பொருள்களுக்கு புதிய விலைகள் நிர்ணயம்

(யாழ்ப்பாணம்) யாழ். மாவட்டப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனையாகும் சில பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இந்த விலை நிர்ணயம், இம்மாதம் 15ந் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளது.

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் விற்பனையாகும் பொருட்களுக்கு குடாநாடு தீவுப்பகுதி வடமராட்சிகிழக்கு ஆகிய இடங்களில் வெவ்வேறு விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டில் ஒரு கிலோ சீனி 34-00 ரூபா, ஒரு கிலோ வெங்காயப் பச்சை (4-ம் பக்கம் பார்க்க)

## நடவடிக்கை

(மாங்குளம்) வவுனியாவில் ஏற்பட்டுள்ள மண்ணெண்ணெய் தட்டுப்பாடு விரைவில் நீக்குவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (150)

## யாழ். வைத்தியசாலையில் தாதிகள் பற்றுக்குறை

(யாழ்ப்பாணம்) யாழ். போதனா வைத்தியசாலையில் தேர்ச்சிபெற்ற தாதிகள் பற்றுக்குறை நிலவுகிறது. இதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

யாழ். போதனா வைத்தியசாலையின் ஆளணியின் பிரகாரம் 400 தாதிகள் கடமையாற்றவேண்டும். தற்போது 200 தாதிகளே இங்கு கடமையாற்றுகிறார்கள். (153)

## தேசியசேமிப்பு வங்கியில் காசோலைகள் தேக்கம்

(யாழ்ப்பாணம்) தேசிய சேமிப்பு வங்கி கிளையில் பணத்தை மீளப்பெறுவதற்கு விண்ணப்பித்த பலருடைய காசோலைகள் உரியவர்களால் எடுத்துச்செல்லப்படாமல் வங்கியில் தேங்கிக்கிடப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


### புளொக்

புளொக் (BLOCK) புகைப் படம் - றபர் சீல் - கலர் படம் - ஓவியம் - பிறேம் போடுதல் - கலர் பிலிம் சுருள்கள் ஸ்ரிச் கேஸ் முதலியவற்றிற்கு நாடுங்கள். கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (சி-1134)

### "இருள் இரவில் அல்ல"

மீரா வெளியீடு எந்த ஒரு பெண்ணும் இளம் வயதில் கணவனை இழக்கக்கூடாது! எந்த ஒரு ஆணும் வயோதிப காலத்தில் மனைவியை இழக்கக் கூடாது இழந்தால்? வித்தியாசமான நாவல். துர்க்கா ஜெனரல் ஸ்ரோர்ஸ், சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, பிக் பெல்ஸ் (B) கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும். (சி 4445)

### விற்பனைக்கு

உங்கள் பெறுமதி மிக்க புத்தகங்கள், கொப்பிகள் அனைத்தும் மிக அழகான முறையில் (பைண்டிங்) கட்டிக்கொடுக்கப்படும். இவை நூலகங்கள் மற்றும் கல்லூரி புத்தகங்களுக்குக் குறைந்த சலுகை வழங்கப்படும். விபரங்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, (மின்சார நிலைய வீதி), யாழ்ப்பாணம். (ஏ 1130)

### புத்தகம்

வளைகுடாப்போர் (போர் தந்திரங்கள் - விளைவுகள் - தாக்கங்கள்) By அ. சி. உதயகுமார் B. Sc இந்நூல் சர்வதேச அரசியல் ஆய்வுகளை மேற்கொள்ளவும், ஆய்வுகளை மேற்கொள்ள முற்படுவோருக்கும் பயன்படக்கூடிய அரிய நூல். வெளியீடு Tamil Institute of Strategic Studies விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (ஏ-1138)

**நிரு**

ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

பொருளியல்:
திரு. உதயன்
91 A|L

பகுதி II
சென்மதி நிலுவை
வியாழன் - 4 மணி

பகுதி I
பணம்
செவ்வாய் - 4 மணி

18 வருட
வினாவிடை
வகுப்புக்கள்

செவ்:
வியா: } 5 மணி.

(ஏ-1129)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### புலமைப் பரிசில் பரீட்சை

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 17-03-91 ஞாயிறு மு. ப. 8.00 / மு. ப. 10.30, மணி நேரங்களில் நடைபெறும் பதிவு செய்யவும். புலமைப்பரிசில் மாதிரி வகுப்புகளும் ஆண்டு 4 முதல் ஆண்டு 11 வரை சகல பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி4451)

### தவறிவிட்டது

இல: 331072010V சுந்தரம் பிள்ளை பேரம்பலம், 207, மகாவித்தியாலய மாவத்தை, கொழும்பு - 13 எனக் குறிப்பிடப்பட்டுள்ள அடையாள அட்டை சரவணைக்கும், யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிடப்பட்ட விலாசத்தில் ஒப்படைக்கவும். "தேவ வாசா" சரவணை மேற்கு, வேலணை. (சி-4450)

வேலுப்பிள்ளை வீரகத்தி இராமநாதன் 235/1 ஏத்துக்கால், நீர்கொழும்பு முகவரி இடப்பட்ட கட்டிட ஒப்பந்தக்காரருக்கான பதிவுப் புத்தகம் சிகப்புக் கவருடன் (கட்டிடத்திணைக்களம்) 12-ந் திகதி கோப்பாய் சந்திக்கும் கச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் V. V. இராமநாதன், "பாக்கிய பவனம்" கல்லூரி வீதி, பருத்தித்துறை என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (சி-4447)


## தமிழ் ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் மாதந்தோறும் தமிழ் ஆய்வரங்கு இடம்பெறவிருக்கிறது.

இந்த ஆய்வரங்கு ஒவ்வொரு மாதமும் 2-ம், 4-ம் வாரங்களில் மாலை 2 மணிக்கு இடம்பெறும்.

இந்த ஆய்வரங்கில் தமிழியல் ஆய்வை ஊக்குவித்தல் சம்பந்தமான நிகழ்ச்சிகள் முக்கிய இடம்பெறவிருக்கிறது. (152)

## 250 மாணவர் 2 ஆசிரியர்

(வடமராட்சி)

வடமராட்சியிலுள்ள அல்வாய் மெதடிஸ் மிஷன் அரசினர் பாடசாலையில் இருநூற்று ஐம்பது மாணவர்களும் ஐந்து வகுப்பறைகளையும் உடைய மேற்படி பாடசாலையில் இரு ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றுகின்றார்கள்.

அதிபரும் உதவி ஆசிரியருமே கடமையாற்றுகிறார்கள். இப்பாடசாலையின் நிலை குறித்து இதுவரை யாரும் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை (51)

## கல்வி ஊக்குவிப்பு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச்சபையின் 'கல்வி ஊக்குவிப்பு போட்டிகள்' இம்மாதம் பிற்பகுதியில் நடைபெறவுள்ளன.

க. பொ. த (சாதாரண) மாணவர்களுக்கு விஞ்ஞானம், கணிதம், வர்த்தகத்திலும் ஆண்டு 1 முதல் ஆண்டு 5 வரை சிவபுராணமனனப்போட்டியும் ஆண்டு 1 முதல் ஆண்டு 13 வரை ஆங்கில பேச்சுப்போட்டியும் நடைபெறவுள்ளன (சி)

## மாணவருக்கு சீருடை

(புலோலி)

பருத்தித்துறை கற்கோவளம் மெ. ம. த. க. பாடசாலை மாணவர்களில் வறிய மாணவர்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் சீருடைகள் பாடசாலை அதிபர் திரு எம். தங்கராசாவினால் வழங்கப்பட்டது. (61)


உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்

**அங்கத்தவர் இடாப்பு மூடுதல் பற்றிய அறிவித்தல்**

எமது ப. நோ. கூ. சங்கக் கிளைகள் அனைத்திலும் கிளைக்குழுத் தேர்தல் நடாத்தப்படவிருப்பதால் அதற்குரிய வாக்காளர் இடாப்பு தயாரிப்பதற்காக அங்கத்துவ இடாப்பு 31-03-91 உடன் மூடப்படவுள்ளது.

அங்கத்தவராக சேர்வதற்கு தகுதியுடையவர்கள் அனைவரும் 31-03-91 பி. ப. 4 மணிக்கு முன்னர் ரூபா 10/- செலுத்தி அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளவும். ஒரு பங்கின் பெறுமதி ரூபா 10/-. 10/- ரூபாவுக்கு குறைந்த பங்குப்பணம் செலுத்தியவர்கள் மிகுதியை செலுத்தி பூரண அங்கத்தவராகி வாக்களிக்கும் தகுதியை பெறும்படி தயவாக கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்.
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்;
(ஏ 1143) உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை.

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம்

**பொதுக் கூட்டமும், நிர்வாகசபைத் தெரிவும்**

தமிழீழத்தில் வாழ்கின்ற சுருட்டுத் தொழிலாளரின் ஒன்றுபட்ட கோரிக்கையை வென்றெடுக்கும் முகமாகவும் சுருட்டுத் தொழிலாளரின் பின்தங்கிய நிலையில் இருந்து மீட்சி பெற்று வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்துவரும் அவர்களின் வாழ்க்கை நிலை உயர்வடையவும் சமுதாய கஸ்டங்களில் இருந்து மாற்றம் பெறவும் தொழிலாளர் அனைவரையும் ஒன்றுபடுத்தும் நோக்கமாக ஒரு அணியின் கீழ் ஒரு அமைப்பை தங்களுக்குள் கட்டி எழுப்ப தீர்மானித்து இருப்பதால் சகல சுருட்டுத் தொழிலாளர்களும் இவ்வமைப்பில் இணைந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றோம். சகல தொழிலாளர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களை உறுப்பினராக பதிவு செய்யுங்கள்.

இடம்: ஞானபண்டித வித்தியாசாலை, கொக்குவில்.
காலம்: 16-03-1991 சனிக்கிழமை மாலை 2.00மணி.
தலைவர்: பொன். மதிமுகராஜா
தலைவர் வட பிராந்திய மினிடன் சேவை சங்கம்

அழைப்பாளர்
(சி 4448) சு. ஞானசுந்தரம்


## கடற்படையினர் சூடு; மீனவர் கடலில் பாய்ந்தனர்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்தவர்கள் மீது கடற்படையினர் சுட்டபோது அவர்கள் கடலில் பாய்ந்து உயிர்தப்பினர்.

கடந்த 9ம் திகதி காலை இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கட்டுமரத்தில் சென்ற மீனவர் மீதே 'கிசைப்' படகில் வந்த காரைநகர் கடற்படையினர் சுட்டனராம்.

இதேவேளை ஊர்காவற்றுறை இராணுவமுகாமிலிருந்து கடந்த சில தினங்களாக தொடர்ச்சியான ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. (59)


**6-ம் மாத நினைவஞ்சலி**



**லெப்டினன் நெப்போலியன்**
[ச. விக்கினேஸ்வரன்]

தாயின் மடியில்: 29-07-1971 — தாயக மண்ணிற்காக: 13-09-1990

தாவடி இ. த. க. பாடசாலை, யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி, தமிழ்நாடு [மதுரை] சென்மேரிஸ் கல்லூரி, விவேகானந்தா கல்லூரி. [வைத்தியத்துறை] மாணவன்.

13-9-90 அன்று யாழ். கோட்டையில் வீரமரணம் அடைந்த 13 போராளிகளை நினைவு கூருகின்றோம்.

ஸ்ரீ விக்னேஸ்வரா,
120, தமிழரசுவரன் வீதி,
யாழ்ப்பாணம். (சி 4448)

நண்பர்கள்
விக்னேஸ்வரன் வீதி,
தாவடி.

**PATRICIAN INSTITUTES**

**தொழில்நுட்ப பயிற்சி நெறிகள்**

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

1. Computer programming in Basic Language and Disk Operating System. (3 months)
2. City and Guilds of London Institute Quantity Surveying (Part-I) (6 months)
3. Draughtsmanship (கட்டிடப்படம் வரைதல்) (6 months)
4. Short-hand and Typing சுருக்கெழுத்து, தட்டெழுத்து (6 months)
5. Motor Mechanism மோட்டார் மெக்கானிசம் (6 months)
6. Motor Winding மோட்டார் வைன்டிங் (4 months)
7. Electrical Wiring - மின்சார இணைப்பு (3 months)

மேற்படி பயிற்சிநெறிகள் எதிர்வரும் 20-03-1991 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

மேலதிக விபரங்கட்கு:

**பற்றிசியன் இன்ஸ்ரிரியூட்ஸ்**
59, சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

Patrician Institute of Higher Studies
59, St. Patricks Road, Jaffna.

(A-1144)

# பண்டிதமணியும் கல்வி ஞானமும்...

## சில நினைவுகள்

மனிதருட்சிலரே தெய்வாம்சத்துடன் பிறந்து இறந்திருக்கிறார்கள். அம்மகாபுருஷர்களின் நினைவை பல தலைமுறை சென்றாலும் இவ்வுலகம் அழியும்வரையும் மக்கள் மறத்தல் இல்லை நாவலர் என்று சொல்லும் சொல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களைக் குறித்தல்போல பண்டிதர் என்னும்பொழுது அது பண்டிதமணி கணபதிப்பிள்ளை என்னும் பெரியாரையே சுட்டுவதாகும். ஈழத் தமிழ்நாட்டில் அவரை அறிந்திராதவர் இல்லையெனலாம்.

பண்டிதமணி ஐயா அவர்கள் சொல்லாடலிற் தேர்ச்சி பெற்றவர், இவருடன் ஒரு நாழிகை நேரம் பேசிப்போகலாமென்று சொல்லும் ஒருவர் மூன்று நாளிலாக பேசிச் செல்லாது விடுதல் அரிது. அவர் சொல்லாட எடுக்கும் பொருள்கள் பல திறத்தன அரசியல், பொருளியல், இலக்கியம், சமயம் என்பன சில ஒவ்வொரு பொருளிலும் தமக்கென உறுதியான கொள்கை பூண்டவர் இவரது கொள்கைகள் சிந்தனையை அடிக்கொண்டெழுந்தனவாதலால் நிலைகொண்டவையாக இன்றும் வாழ்ந்துவருகின்றன.

### சைவர் யார்?

ஒருமுறை யாழ்ப்பாணம் இந்துமகா சபைக்கூட்டமொன்றில் சைவர் யார்? என்பதற்கு வரைவிலக்கணம்கூற முயன்று பெரிதும் இடர்பட்டார் ஒருபேச்சாளர். ''விபூதி உருத்திராக்கம், அணிவோராய் சிவதீட்சை பெற்றோராய்'' என நீட்டிக்கொண்டுபோனார் அவர். இன்னொருவர் அதைக் குறுக்கினார்: தலைவர் அப்பொழுது பக்கத்தில் இருந்த பண்டிதமணியின் அபிப்பிராயத்தைக் கேட்டார்,

அவர்மெல்ல எழுந்து மெலிந்த குரலில் ''ஆபிரகாம்லிங்கன் கடைசிப்பகுதியாக இருந்து சீனிவிற்ற கதையைச் சொல்லி உறக்கக் கலக்கத்தில் ஒருமுறை தல் சீனிக்குப் பணம் வாங்கிக்கொண்டு அரைறாத்தல் கொடுத்தமைக்கு வருந்தி ஊர்முழுவதும் தேடி உரியவரிடம் மற்ற அரைறாத்தலையும் கொடுத்தபின்னரே கடை திறந்த அவன் ஜனாதிபதியாய் ஒருநாள் - சைவனாய் வந்திருக்கலாம் என்றார். அருகில் இருந்தவர் எழுந்து பண்டிதமணி 'எதிக்ஸ்' பேசுகிறார். 'எதிக்ஸ்' வேறு; சமயம் வேறு

### ஐயா சச்சிதானந்தம்

என்றார் லண்டன் பி. ஏ க்கு டரீட்சை வெவ்வேறாக இருக்குமாம். அவர் பீ ஏ; என்பதால் அப்படி பேசுகிறார் என்று கூறி சைவநெறியின் நிற்க எண்ணுபவனுக்கு அவை வேறல்ல; தர்மத்தை விலக்கி ஒரு ஞானமுமில்லை. அதனை ஒழுகுபவனே சைவர் என்றார் சபையே மௌனமாகியது.

இத்தகைய பெருமைமிக்க பண்டிதமணி ஐயா அவர்கள் தாம் வாழ்ந்ததோடுமட்டுமல்ல வாழ்ந்த இடத்தையும் வாழவைத்திருக்கின்றார். அவர் தமது கடைசிக்காலத்தில் திருநெல்வேலியில் வாழ்ந்து திருநெல்வேலியிலுள்ள மக்களுக்கும் தமிழ் அபிமானிகளுக்கும் அவர் பேராசிரியராக வாழ்ந்து மகிமாப்புகழுடன் இறைவனடி சேர்ந்தார். திருநெல்வேலியில்தான் மேலைத்தேச பாஷைகளில் உள்ள காவியங்கள் அலசி ஆராயப்பட்டு புதிய தமிழ் வடிவங்கள் உருவாகின.

இயற்கை புலவர்களாகிய ஹோமர், கேஜில், ஷேக்ஸ்பியர், டிக்கின்ஸ், ஸ்கொற், ஷோ வேல்ஸ் முதலியோரின் நூல்களெல்லாம் வாசிக்கப்பட்டும், மொழிபெயர்க்கப்பட்டும் சுவைக்கப்பட்டும், கண்டிக்கப்பட்டும் கற்பனைக்கெட்டாத கல்வியற்புலம் உருவாகிவந்தது. இந்தச் சூழலில் தான் பண்டிதமணி ஐயாவின் கேள்வி ஞானமும் கல்வி ஞானமும் தமிழ் உலகத்திற்கு தெரியவந்தது.

இவ்விதமாக எல்லாவழிகளிலும் ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் எமக்குவழிகாட்டியாக இருந்த 'ஐயா' அவர்களை இன்று நினைவுகூருவோம்

## தேவரும் வியக்க வாழ்ந்தார்

[விருத்தம்]

பண்டித மணியென் றாலே
பாருளோர் போற்றி நிற்பார்
எண்டிசை யுள்ளார் சீடர்
ஏத்துவர், எந்த நாளும்
கண்டென இனிக்கும் பேச்சுக்
காவிய நடை எழுத்து
விண்டல ஞானி றென்ன
வேந்தரும் வியக்க வாழ்ந்தார்:

அருள் ஒழுகும் திருமுகத்தில்
அன்பு சொட்டும் கண்களிலே
விரவிய வெண்தா டியினை
விரல்களினால் மிருது செய்து
அருமைபெற முறுவ லித்து
ஆதரவு மிகக் காட்டிப்
பெருமையுற அழைப்பார் காண்
பெருந்தெய் வப்பண் டிதனார்.

- ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்

[பண்டிதமணி அவர்களின் 5வது நினைவுதினம் இன்றாகும்]

## இந்து ஆலயங்கள் திட்டமிட்டு அழிப்பு

(பளை)

வடக்கு-கிழக்கு மாகாணங்களில்உள்ள இந்து ஆலயங்களை இலங்கை அரசு திட்டமிட்டு அழித்து வருவதும், யாழ் மாவட்டத்திற்கு கற்பூரம் கொண்டுவருவதை தடை செய்துள்ளதும் ஸ்ரீலங்கா அரசினால் இந்துமத அழிப்புக்கு அத்திபாரம்.

எனவே இச்செயலுக்கு உலக நாட்டு இந்துமக்கள் ஒருமித்த குரலில் கண்டனம் தெரிவிக்க வேண்டும், இவ்வாறு சரசாலை இந்து இளைஞர்மன்றம் விசேட அறிக்கையில் தெரிவித்திருப்பதாக மன்றச் செயலாளர் க. சிவசங்கரநாதன் தெரிவித்தார்.

## சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையின் 'மகா சிவராத்திரி விழா' நாளை வியாழக்கிழமை காரைநகர் ஈழத்து சிதம்பரத்தில் நடைபெறவுள்ளது.

நான்கு சாமப்பூசையும், பஜனை, சமயச்சொற்பொழிவுகள், பன்னிரு திருமுறை ஓதலும் நடைபெறவுள்ளது.

0 0 0

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 14ம் திகதி வியாழக்கிழமை கோப்பாய் வெள்ளெருவைப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் சிவராத்திரிவிழா சிறப்பாகக் கொண்டாடப்படவிருக்கிறது. (59)

## யு. எஸ். உதவித் திட்டத்தில் 15,000 விவசாயிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் 15 000 விவசாயிகளைத் தெரிவுசெய்து யு எஸ் உதவி நிறுவனம் விவசாய உள்ளீடுகளை வழங்குவதற்கு முன்வந்திருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் விவசாய உள்ளீடுகள் பின்வரும் நான்கு அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் மூலம் வழங்கப்படவிருக்கிறது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், உலர்வலய அபிவிருத்தி நிறுவனம், சிக்கன கடன் வழங்கு நிறுவனம் ஆகியவற்றின் மூலம் பயிர்ச்செய்கை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (153)

## பட்டப்பகலில் சாறி, பாதணி திருட்டு

[மானிப்பாய்]

நவாலியில் பட்டப்பகல் வேளையில் பெறுமதிமிக்க சாறிகளும், பாதணிகளும் திருட்டுப்போயுள்ளன.

இச்சம்பவம் நவாலி தெற்கைச் சேர்ந்த பாலிலுப்பிள்ளை ஆரோக்கியராசா என்பவரது வீட்டில் இடம் பெற்றுள்ளது:

அப்பகுதியில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றுக்கு வீட்டுக்காரர் சென்றுவிட்டு மாலை 6 மணியளவில் வீட்டுக்கு வந்த சமயம் வீட்டுக் கதவு திறந்திருந்ததாகவும் உள்ளேயிருந்த சுமார் ஐயாயிரம்ரூபா பெறுமதியான சாறிகள் உட்பட பாதணி வகைகளும் திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதும் தெரியவந்துள்ளது; (71)

## இராசி பலன்

13-03-1991

புதன்கிழமை

துவாதசி பி. ப: 1 17 வரை: திருவோணம் பி. ப. 2-45 வரை. சித்தயோகம் இராகுகாலம் பகல் 12-22 முதல் 1-22 வரை சுபநேரம் மாலை 4-53 முதல் 6-22 வரை;

மேடம்: தொழில் லாபம், பயணங்களால் அனுகூலம், தெய்வ தரிசனம்.

இடபம்: மனமகிழ்ச்சி, திருமணயோகம், உறவினர் வருகை

மிதுனம்: மனவேதனை, சிறுபிணி, தொழில் கஷ்டம், பகை;

கடகம்; உறவினர் விரோதம், காரியதாமதம், மனக்குறை.

சிங்கம்: புதிய தொழில் முயற்சி. புத்திரர் பாராட்டு, கடன் வசூல்.

கன்னி: நெருக்கடி, தொழில் குறைவு, குடும்பக் கஷ்டம், யோசனை.

துலாம்: துயரமான செய்தி, அலைச்சல் மிகுதி, தொழில் பிணக்கு

விருச்சிகம்: கடினஉழைப்பு, அந்நிய வாசம், தூரத்துச் செய்தி,

தனுசு: புதிய ஸ்தானம், காரிய வெற்றி, தொழில் மகிழ்ச்சி, குடும்ப சுகம்

மகரம்: கடவுள் சிந்தனை, பெண் உதவி, காரியதாமதம்;

கும்பம்: பொதுத்துறைப் பாராட்டு, மனைவியால் மகிழ்ச்சி, விருந்துபசாரம்:

மீனம்: குடும்பப் பிணக்கு, தானதர்மம். தொழில் கஷ்டம். அசதி;

- ஜோஸ்யர்

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்க பொதுக் கூட்டம் கொக்குவில் ஞான பண்டித வித்தியாசாலையில் இம்மாதம் 16ம் திகதி சனிக்கிழமை மாலை 2 மணிக்கு வடபிராந்திய மினியஸ் சேவை சங்கதலைவர் பொன். மதிமுகராஜா தலைமையில் நடைபெறும். (க)

## பலதும் பத்தும்

### அமெரிக்க டாக்டர்களையும் கவர்ந்த சித்தவைத்தியம்

அமெரிக்க வைத்தியர்கள் ஆராய்ச்சிக் கழகம், மூலிகைகள் பற்றிய புதிய ஆராய்ச்சிகளை ஆரம்பித்துள்ளது ஆங்கில வைத்தியரால் குணப்படுத்த முடியாத பல நோய்களைச் சித்த வைத்தியத்துறை குணப்படுத்துவதால் இவ்வாராய்ச்சிகளைத் தாங்கள் ஆரம்பித்திருப்பதாக இக்கழக ஆண்டறிக்கை தெரிவிக்கின்றது, இதுகுறித்த நூல்கள் ஐரோப்பியர்கள் அமெரிக்காவைக் கண்டுபிடித்த 500-வது ஆண்டு நிறைவு விழாவில் வெளிவரவுள்ளன;

'போகர்' என்றழைக்கப்படும் சித்தர் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த தாவரங்களை வரிசைப்படுத்தி ஒவ்வொரு தாவரமும் எந்தெந்த நோய்க்கு நிவாரணியாக விளங்குகிறதென்பதை நிரல்படுத்தி தந்துள்ளார். போகரைத் தொடர்ந்து பதினெட்டுச் சித்தர்களும் சித்தவைத்திய நூல்களைத் தந்துள்ளனர்

'கிருமிகளை அகற்றுவன' என்றும் 'புண்களை ஆற்றுவன' என்றும் போகரால் குறிப்பிடப்படுபவை

கொன்றை (Cassic fistula தகரை (Cassia Sophera) முருங்கை (Moringa Pterygosperma) வேலிப் பருத்தி (Pergularia Daemina) ஆடாதோடை (Adhatoda Vasica) நொச்சி (Vitex Trifolia) போன்றவற்றின் சாறுகள் (Extracts) நுண்ணுயிர் கொல்லும் (Antibiotics) குணமுடையனவாகும்

— ஞாநி

## ★ இலங்கையருக்கு மத்திய கிழக்கு நாடு செல்ல இலவச விமான டிக்கட்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வளைகுடா யுத்தம் காரணமாக நாடு திரும்பிய இலங்கையர் மீண்டும் அங்கு செல்ல இலவச விமான டிக்கட்டுகள் வழங்கப்படவுள்ளன,

வளைகுடா பிரச்சினையால் சுமார் ஒன்றரை லட்சம் இலங்கையர் தொழில்களை இழந்து நாடு திரும்பியிருந்தனர். தற்போது அங்கு சுமுகநிலை ஏற்பட்டுள்ளதால் இவர்கள் மீண்டும் அங்கு செல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

நாடு திரும்பிய அனைவருக்கும் அரசு இலவச விமான டிக்கட்டுகளை வழங்கி எந்தெந்த நாடுகளிலிருந்து அவர்கள் திரும்பினார்களோ அவ்வவ் நாடுகளுக்கு அனுப்ப ஏற்பாடுகளை தொழில் அமைச்சு மேற்கொண்டுவருகிறது: (கி)

## மட்டக்களப்பு, அம்பாறை சுற்றிவளைப்பு 3000 தமிழர் கைது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு ஆயிரக்கணக்கான தமிழர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இரு மாவட்டங்களிலும் இதுவரை சுமார் 3000 தமிழர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது;

மண்டூரில் நேற்றுமுன்தினம் 350 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர், இவர்களில் பெருமளவிலானோர் விடுவிக்கப்பட்டதாக அரசு தரப்பில் கூறப்பட்டுள்ளது. (கி)

# இந்தியப் பாராளுமன்றம் விரைவில் கலைக்கப்படும்

(புதுடில்லி)

இந்தியப் பாராளுமன்றம் இன்னும் ஒருசில நாட்களில் கலைக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசின் இடைக்கால நிதி மசோதாக்களும் பஞ்சாப் அஸாம் மாநிலங்களை 6 மாதங்களுக்கு ஜனாதிபதி ஆட்சியில் நீடிப்பதற்கான மசோதக்களும் நிறைவேற்றப்பட்டு விட்டன.

அடுத்த நடவடிக்கை பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். இதனை ஜனாதிபதி திரு. வெங்கட்ராமன் மிகவிரைவில் அறிவிக்கவுள்ளார்.

இந்திய அரசியலில் தற்போது தோன்றியுள்ள நெருக்கடி நிலைகுறித்து பிரதமர் சந்திரசேகர் ஜனாதிபதி வெங்கட்ராமனுடன் சுமார் அரை மணிநேரம் சந்தித்து கலந்துரையாடினார்.

புதுடில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகையில் நேற்றுக்காலை நடைபெற்ற மேற்படி சந்திப்பில் வேறுபல அரசியல் பிரமுகர்களும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது. (க-பூ)

## தேசியசேமிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இக்காசோலைகளை வைப்புச் செய்தவர்கள் காரியாலய நேரத்தில் பெறலாமென வங்கி அறிவித்துள்ளது. (56)

## ஷெல் வீச்சினுல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு பத்து மணியளவில் அக்கடற்பகுதியில் சென்ற இந்தப்படகு மீது கடற்படையினரால் பலத்த ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

இப்படகில் சென்ற மீனவர்கள் பற்றிய தகவல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. (150)

## உணவுப் பொருள்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவ்பி, உழுந்து, பயறு, நிலக்கடலை, சோளம் போன்ற தானியங்களும் சந்தைகளில் பெருமளவில் காணப்படுவதால் நாளாந்தம் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுவருகின்றன.

தேங்காய் எண்ணெயும் பல இடங்களில் விற்கப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (56)

## யாழ். மாவட்டத்தில் 112 இராமசேவையாளர்கள் பதவிகளுக்கு வெற்றிடம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் தற்போது 435 கிராமசேவை அலுவலர் பிரிவுகள் இருக்கின்றன.

இதில் 112 கிராமசேவை அலுவலர் பதவிகள் வெற்றிடங்களாக இருக்கின்றன.

300 குடும்பங்களுக்கு ஒரு கிராமசேவை அலுவலர் என்ற வீதத்தில் யாழ். மாவட்டத்தில் 1000 கிராமசேவை அலுவலர் பிரிவுகள் உருவாகவிருக்கின்றன.

கிராமசேவை அலுவலர் பதவிக்கான வெற்றிடங்கள் வெகுவிரைவில் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நிரப்பப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (153)

## ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவமுகாமிலிருந்து நேற்றுக்காலை பத்து மணியளவில் தொண்டமனாறு பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல் நடாத்தப்பட்டது.

12 ஷெல்கள் பலாலியிலிருந்து ஏவிவிடப்பட்டன. (வி)

## பிரங்கித் தாக்குதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தும்பளை கிழக்கைச் சேர்ந்த கந்தையா (59வயது), திருமதி இராமச்சந்திரன் இறிஸ்சந்திராணி 27 வயது), அவரது மகளான ஸ்ரீபிரியா (2 வயது) ஆகியோர் காயமடைந்தனர். (61)

## மண்டூரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அப் பகுதிகளில் ஒரே குண்டுச் சத்தங்களாகவும் வெடிச் சத்தங்களாகவும் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (150)

## வவுனியாவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவரது மனைவி ஸ்ரீமாலினி (30 வயது), இவருடைய தாயார் ஆகியோரே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவராவர். ஸ்ரீமாலினி புதுக்குளம் மகாவித்தியாலய ஆசிரியை என்பது குறிப்பிடத்தக்கது.

மீண்டும் காலை 9-30 மணியளவில் இப்பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் எஸ். சந்திரகுமார் (14 வயது) முல்லைத்தீவு, சௌந்தரநாயகம் 50 வயது) மரக்காரம்பளை) ஆகியோர் படுகாயமடைந்தனர். இப்பகுதியிலுள்ள பத்மநாதன் என்பவரது வீடு பலத்த சேதம் அடைந்தது.

சிடாய் ஆறி என்ற இடத்தில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் எஸ். கலாநிதி (20வயது), செல்வநாயகி (30 வயது) ஆகியோர் படுகாயம் அடைந்தனர். செல்வநாயகியின் வீடும் சேதமடைந்தது. (வி)

## கொழும்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த நோக்கம் உட்பட முக்கியமான விபரங்கள் யாவும் பெற்ற பின்பே இவர்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பகிஷ்கரிப்பை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பினைக் கைவிட்டு பாராளுமன்றம் செல்வதற்கு இக்கட்சிகள் தீர்மானித்துள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன. (பூ)

## மீண்டும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்பும் ஒரு தடவை வவுனியாவில் வைத்து இராணுவத்தினரால் யாழ். அரச அதிபர் திருப்பி அனுப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது. (56)

## பீப்பா குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி உடையார்கட்டுக்குளம் பகுதியில் கடந்தவாரம் இரவு 8-00 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று உழவு இயந்திரம் மூலம் நெற்சூடு அடித்துக்கொண்டிருந்த தொழிலாளர் மீது பீப்பாக் குண்டை வீசியது.

இக்குண்டு சேற்றில் வீழ்ந்து புதைந்ததையால் பலரின் உயிரிழப்புத் தவிர்க்கப்பட்டது. (56)

## ப. நோ. கூ.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அரிசி 26-00ரூபா, ஒரு கிலோ கோதுமை மா 25-00 ரூபா, ஒரு கிலோ மலிபன் மாறி பிஸ்கட் 70-00 ரூபா, ஒரு கிலோ சர்க்கரை 33 ரூபா 50 சதம், ஒருகிலோ கோறு அரிசி 26-00 ரூபா, சோயா மீற் (ரிவிபி) 13 ரூபா 50 சதம், சைக்கிள் டயர் 95-00 ரூபா, சைக்கிள் ரியூப் 40-00 ரூபா.

தீவுப்பகுதி, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் ஒரு கிலோ சீனி 36-00 ரூபா, ஒரு கிலோ வெள்ளைப் பச்சை அரிசி 27-00 ரூபா, ஒரு கிலோ கோதுமை மா 26 ரூபா 50 சதம், ஒரு கிலோ மலிபன் மாறி பிஸ்கட் 75-00 ரூபா, ஒரு கிலோ சர்க்கரை 35 ரூபா 50 சதம், ஒரு கிலோ கோறு அரிசி 27-00 ரூபா, சோயா மீற் (ரிவிபி) 14-00 ரூபா. சைக்கிள் டயர் 97 ரூபா 50 சதம், சைக்கிள் ரியூப் 42ரூபா 50 சதம்.

நேற்றுக்காலை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் பங்குபற்றிய கலந்துரையாடலில் இந்த விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டது.

இச்சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

உழுந்து, நெல் முதலியவற்றைக் கொள்வனவு செய்வதற்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சந்தைப்படுத்தும் கடனை மக்கள் வங்கியிடமிருந்து பெறுவதற்கு முயற்சி எடுத்தல்.

பசளை வகைகளை அநுராதபுரத்திலிருந்து கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

வங்கி ஆணைக்கு அறவிடப்படும் தரகுப் பணத்தைச் சங்கங்களுக்குக் கழித்துவிடுமாறு மக்கள் வங்கிப் பிரதம முகாமையாளரை மகஜர் மூலம் கேட்டல்.

கொழும்பிலிருந்து கொண்டுவரப்படும் பொருட்களின் விலையை நிர்ணயம் செய்வது. உச்ச விலையைவிடக் குறைவான விலைக்குப் பொருட்களை விற்கவும் நடவடிக்கை எடுத்தல் என்பன தீர்மானிக்கப்பட்டது. (153)

## மரண அறிவித்தல்

### வை. கணபதிப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது ஸ்கந்தபுரத்தில் வதிவிடமாக கொண்ட வைத்தியநாதர் கணபதிப்பிள்ளை 11-03-91 இல் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்புக் கணவரும் திருமதி கனகம்மா, பசுபதி (பங்காளர் ராம் சேது அன் கொம்பனி) முத்துப்பிள்ளை, லட்சுமி நடேசபிள்ளை ஆகியோரின் அருமைத்தந்தையும், திரு. தியாகராசா (இளைப்பாறிய நில அளவை ஊழியர்) திருமதி ப. கோசலை, திரு. வ. கந்தையா (இளைப்பாறிய காணி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்). திரு. ஐ. தியாகராசா திருமதி ந. சகுந்தலாதேவி ஆகியோரின் அன்பு மாமனுருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-03-91 இல் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: க. பசுபதி

39, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

(சி-4444)

### திரு. சூசை மோசேஸ்

தோலகட்டி, பலாலி தெற்கு, வசாவிளானைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. சூசை மோசேஸ் 10-3-1991 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார். இவர் அன்னமரியம்மா (மணியின்) அன்புக்கணவரும், ஸ்ரனிஸ்லாஸ் (பிரான்ஸ்), கொன்சன்ரைவின் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பாலச்சந்திரன் (பாலு), மனோகரன் (கனடா), சந்திரிக்கா (சந்திரா, பிரான்ஸ்), இமெல்டா (இந்திரா), சுபத்திரா, மஞ்சுளா, றிச்சாட் [பிரான்ஸ்] டொனுஸ் (பிரான்ஸ்), டெலாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மேரி அஞ்சலா (பிரான்ஸ்), லங்கேஸ்வரன் (பிரான்ஸ்), பாலேந்திரன் (பிரான்ஸ்), கருணைநாதன் ஆகியோரின் மாமனுரும், றெஜனட், றெஜன்சன், றேகா. கபிலன். றேகன், சிந்து ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்ற பிலிப் திரவியம், காலஞ்சென்ற சவிரிமுத்து, மேரி யோசப்பின் (நல்லம்மா) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 24-3-91 அன்று பொரளை கனத்தைசேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிலிப் கலிஸ்ரஸ் ரவின் (ஜோண்சன்)
25/2, மத்தியூஸ் வீதி,
யாழ். நகர்.

(சி-4449)

## மரண அறிவித்தல்

### திரு. வீரகத்திப்பிள்ளை சீராளசிங்கம் (J. P.)

உடுவில் தெற்கைச் சேர்ந்த திரு. வீரகத்திப்பிள்ளை சீராளசிங்கம் அவர்கள் 12-3-91 ல் சிவபதம் அடைந்தார். இவர் காலஞ்சென்ற சின்னத்துரை, கதிர்காமு, சின்னத்தங்கச்சி ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வராணி, வசந்தாதேவி (சுவிற்சலாந்து) ஆகியோரின் சிறிய தகப்பனுரும், செல்வராசா (பபா). விஜயநாதன் (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்பு மாமனுரும், ஸ்ரீஸ்கந்தபாலன், மேகலா, கலைவாணி, விஜேத் (சுவிற்சலாந்து) ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (13-3-91) இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல்,
S. செல்வராசா
(மருமகன்)

உடுவில் தெற்கு.

(சி-4455)

### சரவணமுத்து மருதலிங்கம்

(சமாதான நீதவான், திடீர் மரண விசாரணை அதிகாரி, பிரபல வர்த்தகர், சுன்னாகம்.)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. ச. மருதலிங்கம் அவர்கள் 12-03-91 இல் காலமானார். அன்னார், சின்னத்தங்கச்சி (ஆசிரியை, அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை) அவர்களின் அன்புக் கணவரும், யசோதா (ஆசிரிய மாணவி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை), கிருதரன் (கனடா), பிரிந்தா, மீரா (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி), ஆகியோரின் அருமைத் தந்தையும், கதிர்காமத்தம்பி (கணக்காளர், சிலோன் அசோசியேற்றட் மோட்டர் வேய்ஸ், கொழும்பு), தங்கரத்தினம், பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகராஜா, தங்கவேலு (C. G. R.), மகாதேவன் (ஜேர்மனி), இராசு (கனடா), திருமதி இராசமுத்து கதிரவேலு (நேர்ஸ், அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை,) விஜயலட்சுமி, காலஞ்சென்ற குமாரசுவாமி, பராஜசிங்கம் (சீநார்) ஆகியோரின் மைத்துனருமாவர்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அச்சுவேலி தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று புதன்கிழமை (13-03-91) பிற்பகல் 2-00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் அச்சுவேலி மயானத்தில் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

தகவல்: செல்வி ம. யசோதா
(மகள்)

ஸ்ரீ விக்னேஸ்வர வீதி,
அச்சுவேலி.

(சி-4456)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 83-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மார்ச் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.